2. உரிமைப் பிரச்சினை

பேரவை நூலகத்தில் ஓர் உறுப்பினர் தம்மை மிரட்டியதாக திரு. குமரி அனந்தன் கொடுத்துள்ள அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை மீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் மாணபுமிகு உறுப்பினா திரு. வி.பி.ஆர். ரமேஷ் அவர்கள் மீது உரிமை மீறல் பிரச்சினை எழுப்புவதற்கான ஒரு அறிவப்பைக் கொடுத்துள்ளார். இது எவ்வாறு அவை உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 2 ஆம் தேதி நான் இங்கு ஒரு கோரிக்கையினை வைத்து அதன் பின்னால் வெளிநடப்பு செய்தோம். அந்த நேரத்தைப் பயனுடையதாகச் செலவிட வேண்டும் என்பதற்காக சட்டமன்ற நூலகத்திற்குச் சென்று படிக்கவும், குறிப்பெடுக்கவும் செய்து கொண்டிருந்தேன். தாங்கள் இப்போது குறிப்பிட்ட மாண்புமிகு உறுப்பினர் அங்கு வந்தார்கள். ''என்னை சட்ட சபையில் காட்டிக் கொடுத்துவிட்டாயே, உன்னை அழிக்காமல் விடமாட்டேன்.'' என்றார். அறிவைத் தேடி வந்த இடத்தில் என்னுடைய அழிவைத் தேடி ஒருவர் வருகிறார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எந்த நிலையிலும் என்னை ஒருவர் குற்றம் சாட்ட முடியாத ஒரு சொல்லை அவர் பயன்படுத்தி விட்ட காரணத்தினால் சிறிது நேரம் துணுக்குற்றேன்; திடுக்கிட்டேன். அவர் பல சொற்களை வேகமாகச் சொன்னார்.

முற்பகல் 11-20

பாரதிய ஜனதாவினுடைய மனுவிலே கையெழுத்திட்ட 4 பேர்களையும் தான் சொன்னேன், தங்களைத் தனிப்படுத்திக் கூறவில்லையே. என்று நான் சமாதானம் கூறினேன். எனக்கு மட்டும் பவர் இருந்தால் உன் கட்சியை அழித்து விடுவேன், உன்னையும் ஒழித்துவிடுவேன் என்றார். நானாக அமைதியாக உங்கள் தந்தை எனக்குத் தெரிந்தவர், அவர் வலியுறுத்தி வேண்டிக் கொண்டதால் மட்டுமல்ல, அன்பாக விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு உங்களுடைய திருமணத்திற்கே வந்து வாழ்த்தினேன் நான், என்னைப் போன்ற மூத்த உறுப்பினரிடம் உன்னைப் போன்றவர்கள் இப்படி பேசக் கூடாது என்று அமைதிபடுத்த முயன்றேன். ''போய்யா, உன்னைப் போல ஆயிரம் பேரைப் பார்த்திருக்கிறேன். உன்னை அழிக்காமல் விடமாட்டேன்'' என்றார் கோபத்திலே. உண்மையை சொல்வதனாலே உயிர் போவதாக இருந்தால், அதற்காக உயிர் நீத்த

உத்தமர்கள் காலடியில் போவதற்கு நானும் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் அவருக்குத் தெரிவித்த வாழ்த்து தொடருகிறது. அவர் விரும்பினால் அவர் முயற்சியைத் தொடரலாம். இத்தோடு நான் இதனை விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அவையின் இன்னொரு உறுப்பினர் குறித்த பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால் அவருடைய கருத்தையும் அறிய வேண்டியுள்ளது. அவருடைய கருத்தைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன். திரு. வி.பி.ஆர். ரமேஷ்.

திரு. வி. பி. ஆர். ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வாழும் கோடிக்கணக்கான மக்களின் பேராதரவைப் பெற்று சென்ற இடமெல்லாம் சீரயும் சிறப்பையும் பெற்று விளங்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பாதத்தைத் தொட்டு வணங்கி அவர்களின் கட்டுப்பாட்டில் வாழும் நாங்கள் மிகவும் கண்ணியத்தோடும் பண்பாட்டோடும் நடந்து கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு மூத்த உறுப்பினர் மீது மதிப்பும் மரியாதையும் வைத்து இருப்பவன். அவர்களிடம் நீங்கள் நன்றாக பேசுகிறீர்கள். எனக்கு உங்களைப் போன்று சரியாகப்பேச வராது என்றுதான் கூறினேன். தவிர மற்றபடி வேறு எதுவும் பேசவில்லை என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களுடைய உணர்வையும் இங்கே தெரிவித்தார்கள். திரு. ரமேஷ் அவர்கள் தான் அவ்வாறு பேசவில்லை என்பதோடு திரு. குமரி அனந்தன் அவர்கள் மீது மிகுந்த மரியாதை வைத்திருப்பவர் என்பதை அவையிலே தெரிவித்திருக்கின்ற அந்த கருத்தை ஏற்று இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடலாம் என்று கருதுகிறேன். இந்தப் பிரச்சினை இதோடு விட்டுவிடப்படுகிறது.

3. தகவல் கோரல்.

ஓர் உறுப்பினர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டது குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் நேற்று கைது செய்யப்பட்டு பிறகு விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது பற்றி என்னிடத்திலே தெரிவிக்கவில்லை.